எம்.சி.ஓ.பி எண்: 123/2024 தேதி: 07.04.2026

மசா. : 4

பெயர் : சொப்னா

க /பெ. : கார்த்திக்

வயது : 36

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 23 மட்டும் தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் வீட்டு வேலை செய்கிறேன். நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். இந்த மனுவை தாக்கல் செய்த மனுதாராரை பக்கத்து தெருவில் வசிப்பதால் தெரியும். மனுதாராரை 15 வருடமாக தெரியும். விபத்து நடந்த தேதி தெரியாது. விபத்தை நான்நேரில் பார்க்கவில்லை. மனுதாரர் மசூதியில் வேலை செய்துவந்தார். அவர் எத்தனை வருடமாக மசூதியில் வேலை செய்தார் என்பது எனக்கு தெரியாது. மனுதாரர் இறந்துபோனவரின் மனைவி. இறந்துபோனவர் டெய்லரிங் வேலையும் செய்துவந்தார். இரண்டு வேலைகளையும் ஒரு மாதம் தோராயமாக இறந்துபோனவர் எவ்வளவு சம்பதித்தார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் வசதி படைத்தவர்கள் அல்ல. நடுத்தர குடும்பம். 1ம் மனுதாரர் வீட்டில்தான் இருக்கிறார். 1ம் மனுதாரருக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் மேஜர். இரண்டுபேரும் வேலைக்கு செல்கிறார்கள். எத்தனை ஆண்டுகள் வேலைக்கு செல்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. இரண்டு பேரும் படித்தவர்கள். 1மனுதாரர் படித்தவரா என்றால் எனக்கு தெரியாது. நான் வந்து மனுதாரரலால் இந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு நியமிக்கப்பட்டேன் என்றால் அது உண்மை.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

துணி தைத்து கொடுப்பார்கள் என்பதற்கான ரசிது தாக்கல் செய்யவில்லை. நான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் இறந்தநபருக்கு துணி தைக்க கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உதவும் நோக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்

சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.